இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 38 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 31 – வியாழக்கிழமை 17 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 38 : Thiruvalluvar Year - 2057 - Aavani 31 - Thursday 17 September 2026 - Dak 10 Pages ₹ 5.00


## அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீது ரெய்டு:

# அப்பட்டமான அரசியல் பழிவாங்கல்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, செப்.17-**

**“முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மீது ரெய்டு நடத்துவது அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகும்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீது ரெய்டு: மற்றுமொரு திசை திருப்பும், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை.

- தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டினால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டங்கள்
- பட்டினப்பாக்கம் மீனவர்கள் போராட்டம்
- நேபாளத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் உரிய பதில் கிடைக்காமல் தலைமைச் செயலகம் முன் போராட்டம்
- ஆவின் பால் தட்டுப்பாட்டால் மக்கள் பரிதவிப்பு
- இராமநாதபுரம் இரட்டைக் கொலை,
- சென்னையில் பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலத்தில் அரசுப் பேருந்து ஓட்டுநர் அடித்துக் கொலை,
- அயனாவரத்தில் பெண் காவலரிடம் த.வெ.க. நிர்வாகி சீண்டல்

என மாநிலத்தை உலுக்கி வரும் எதையும் கண்டுகொள்ளாமல் இலண்டனில் ஷூட்டிங் நடத்திக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

இந்தப் பிரச்சினைகளைச் சரி செய்ய முடியாத விரக்தியில், மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மீது ரெய்டு அஸ்திரத்தை ஏவியுள்ளது எதற்கும் இலாயக்கற்ற த.வெ.க. அரசு.

இந்த அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையைச் சட்டரீதியாக நாங்கள் எதிர்கொள்வோம். எதிர்க்கட்சி மீது ரெய்டு நடத்துவதால் மக்கள் கோபத்தைத் தணிக்க முடியாது. பொய்யான குற்றச்சாட்டுகளும் சட்டத்தின் முன் நிலைக்காது என்பதை இந்த அரசு விரைவில் உணரும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## அன்பில் மகேஸ் வீட்டில் சோதனை:

# பொய் வழக்குகளை சட்ட ரீதியாக எதிர்கொள்வோம்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேட்டி!

**திருச்சி, செப்.17-**

**முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் வீட்டில் சோதனை நடத்தும் தவெக அரசைக் கண்டித்து தி.மு.க. வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் வீட்டில் த.வெ.க. அரசு சோதனை நடத்துகிறது. இந்நிலையில், திருச்சி தென்னூர் பகுதியில் அமைந்துள்ள அன்பில் மகேஸ் பொய்யாமொழி வீட்டின் முன்பு திரண்ட தி.மு.க.வினர், த.வெ.க. அரசைக் கண்டித்து முழக்கமிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்கள் பிரச்சினை களை திசைதிருப்புவதற்காக தி.மு.க. வினர் மீது த.வெ.க. அரசு ரெய்டு நடத்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இடைத்தேர்தலை குறிவைத்து தி.மு.க.வினர் மீது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக அன்பில் மகேஸ் பொய்யா மொழியை குறிவைத்து த.வெ.க. அரசு சோதனை நடத்துவதாக தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என். நேரு குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருச்சியில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் வீட்டில் நடத்தப்படும் சோதனையை தொடர்ந்து அங்கு சென்ற கே.என்.நேருவுக்கு போலீசார் அனுமதி மறுத்தனர். இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், தி.மு.க. நிர்வாகிகளை அச்சுறுத்தும் நோக்கில் த.வெ.க. அரசு சோதனை நடத்துகிறது என்றும் இதுபோன்ற மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது என்றும் கூறினார். த.வெ.க. அரசின் பொய் வழக்குகளை சட்டரீதியாக எதிர் கொண்டு முறியடிப்போம் என்றும் கே.என்.நேரு தெரிவித்தார்.

---

## இடைத் தேர்தல்: குறுகிய காலத்தில்

# எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்வதா?

## சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம்!

*சென்னை, செப்.17-*

எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்துவிட்டு, வேறு கட்சியில் சேர்ந்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது கேலிக்கூத்து என சென்னை உயர்நீதி மன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கு தடை விதிக்ககோரி தொடரப்பட்ட பொதுநல வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி கோவிந்தராஜன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, குறுகிய காலத்தில் எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்துவிட்டு, வேறு கட்சியில் சேர்ந்து அதே தொகுதியில் மீண்டும் இடைத் தேர்தலில் போட்டியிடுவதா என நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதுபோன்ற செயல்கள் கேலி கூத்தானது என்றும், நம்பி வாக்களித்த வாக்காளர்களை அவமானப் படுத்தும் செயல் என்றும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

இதுபோன்ற செயல்களை தடுக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தினர். சில அசாதாரண சூழ்நிலைகளில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். மேலும், வழக்கை தலைமை நீதிபதி அமர்வுக்கு மாற்றி நீதிபதிகள் ஆணையிட்டனர்.

---

## கொடைக்கானலில்

# நிதி அமைச்சர் மரியவில்சனை ஊழியர்கள் முற்றுகை!

*கொடைக்கானல், செப்.17-*

மூன்று மாதமாக சம்பளமே கொடுக்கவில்லை என்று கூறி கொடைக்கானலில் தோட்ட கலை ஒப்பந்த ஊழியர்கள் நிதியமைச்சர் மரிய வில்சனை முற்றுகையிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் கொடைக் கானலுக்கு வந்தார். நேற்று அறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு, நகர் ஏரிச்சாலை பூங்காவில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க அமைச்சர் மரிய வில்சன் காலை 9.40 மணியளவில் தனது கட்சியினருடன் வந்தார். அப்போது, பூங்கா நுழைவாயில் கதவு பூட்டப்பட்டிருந்தது. இதனால் அமைச்சர், அதிகாரிகள் காத்திருந்தனர்.

அப்போது, அங்கிருந்த த.வெ.க.வினர் மற்றும் ஊழியர்கள் சிலர் பூங்கா நுழைவாயில் கதவு பூட்டை உடைக்க முயன்றனர். உடனே அமைச்சர் தடுத்து, “பூட்டை உடைக்கக் கூடாது” எனக் கூறிவிட்டு சுமார் அரை மணி நேரம் காத்திருந்தார்.

பின்னர், அவர் தனது கட்சியினரிடம், “நான் மதுரை ஏர்போர்ட் செல்ல வேண்டும். நேரம் குறைவாக உள்ளதால் மதுரையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துக் கொள்கிறேன்” என கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட முயன்றார்.

அப்போது, நகராட்சி நிர்வாக ஊழியர்களால் திடீரென பூங்கா நுழைவாயில் கதவு திறக்கப்பட்டது. பின்னர், அமைச்சர் மரிய வில்சன், அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது, அமைச்சரை முற்றுகையிட்ட பிரையண்ட் பூங்கா ஊழியர்கள், “எங்களுக்கு கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

உடனடியாக சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றனர். “இதுகுறித்து வேளாண் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும்” என அமைச்சர் தெரிவித்தார்.

---

## மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில்

# தமிழில் குடமுழுக்கு நடத்தக்கோரி போராட்டம்!

## ஏராளமான ஓதுவார்கள் பங்கேற்பு!

*மதுரை, செப்.17-*

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழில் குடமுழுக்கை நடத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ் ஓதுவார்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு நாளை குடமுழுக்கு நடைபெறவுள்ளது. தி.மு.க. ஆட்சியில் கோயில் சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டு, அனைத்தும் முடிவுற்ற நிலையில் தற்போது குடமுழுக்கை நடத்துகிறது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற கோயில்களின் குடமுழுக்கு தமிழில் நடத்தப்பட்ட நிலையில், தற்போது சமஸ்கிருத மொழியில் மட்டும் குடமுழுக்கை நடத்த த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு தமிழ் ஆர்வலர்கள், தமிழ் ஓதுவார்கள் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ் மொழியில் குடமுழுக்கை நடத்த வேண்டும் என வலியுறுத்தி மதுரை மீனாட்சியம்மன் கோயில் முன்பு தமிழ் ஓதுவார்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். குடமுழுக்கு விழாவில் தமிழ் ஓதுவார்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை எனவும் தமிழ் ஓதுவார்களை புறந்தள்ளுவதாகவும் த.வெ.க. அமைச்சருக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.